DEPOSITION OF WITNESS
(Chapter XXIII of Code of Criminal Procedure)
IN THE COURT OF SESSIONS JUDGE OF THE NILGIRIS
AT UDHAGAMANDALAM

| | | |
|---|---|---|
| **Sessions .. ..** | **:** | **Spl.S.C.No. 4 of 2023** |
| **Deposition of witness for** | **:** | **PW-7 (L.W.9)** |
| **Name** | **:** | ஆறுச்சாமி |
| **Father's Name** | **:** | |
| **Age** | **:** | |
| **Address** | **:** | |
| **Calling** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873**

**08.04.2026**

**முதல் விசாரணை:**

நான் கருமத்தம்பட்டியில் வசிக்கிறேன், நான் தமிழக காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 10.04.2022ஆம் தேதி நான் உதகை ஊரக காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது அன்று காலை 10.00மணிக்கு உதகை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலின்பேரில் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முருகன் என்பவரை விசாரித்து அவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அவருக்கு படித்து காண்பித்து கையொப்பம் பெற்று நிலையம்

திரும்பி அன்று பகல் 13.00 மணிக்கு மேற்படி காவல் நிலைய குற்ற எண்.30/2022ல் 294(b), 323, 324 IPC உ/இ. பிரிவு 3(1)(r), 3(1)(s), 3(2)(5)(a) கீழ் வழக்கு பதிவு செய்தேன். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ–9**, முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ–10**, பிறகு அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையினை உதகமண்டலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் நகல்களை காவல் துறை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். ஒரு நகலை புலன் விசாரணைக்கு உரிய விசாரணை அதிகாரி நியமிக்க வேண்டி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைத்தேன். என்னை DSP இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**:

எங்கள் காவல் நிலையத்திற்கும் மேற்படி நடுவர் நீதிமன்றத்திற்கும் இடையில் சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். முதல் தகவல் அறிக்கையினை 10.04.2022 அன்று நீதிமன்றத்திற்கு காவலர்மூலம் அனுப்பிவைத்தேன். அந்த காவலர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் முதல் தகவல் அறிக்கையினை நேரடியாக இந்நீதிமன்றத்திற்குதான் அனுப்பி வைத்ததாக அதில் காணப்படுகிறது என்பது சரி. அதன்படி இந்நீதிமன்றத்தில் முதல் தகவல் அறிக்கை 11.04.2022 அன்று மாலை 5.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பது சரி. உண்மையில் புகார்தாரர் என்னிடம் புகார் வாக்குமூலம் எதுவும் அளிக்கவில்லை

என்றும், அவரது கையொப்பம் மட்டும் நான் பெற்றுக்கொண்டு பின்னிட்டு வழக்கிற்கு ஏற்ப அதை பொய்யாக உருவாக்கியுள்ளேன் என்றும் சொன்னால் தவறு. முதல் தகவல் அறிக்கையையும் நான் சொன்ன நேரத்தில் தயார் செய்யவில்லை என்றும், புகார் வாக்குமூலத்தை பின்னிட்டு பொய்யாக உருவாக்கி அதற்கு ஏற்ப காலதாமதமாக முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன் என்றால் தவறு.

**மறு விசாரணை**: இல்லை.

A. Muraleedharan

Digitally signed by A. Muraleedharan
Date: 2026.04.08 17:48:30 +0530